<u>அயல்நாட்டுக் குடியிருப்பு இந்தியர்/ மற்றும் இந்திய வம்சாளியினருக்கு பன்னாட்டுக் கடன் அட்டை வழங்குதல்</u>

**A.P. (DIR Series) சுற்றறிக்கை எண்.40 (நவமபர் 05, 2002)**

**பாரத ரிசர்வ் வங்கி**
**அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை**
**மைய அலுவலகம்**
**மும்பை 400 001**

**நவமபர் 05, 2002**

<u>A.P.(DIR Series) சுற்றறிக்கை எண் 40</u>

**அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர் அனைவருக்கும்**

<u>அயல்நாட்டுக் குடியிருப்பு இந்தியர்/ மற்றும் இந்திய வம்சாளியினருக்கு பன்னாட்டுக் கடன் அட்டை வழங்குதல்</u>

A.P.(DIR Series) சுற்றறிக்கை எண்.53, 27 ஜுன் 2002 தேதியிடப்பட்டதில் பன்னாட்டுக் கடன் அட்டை பயன்பாடு குறித்த விவரங்களை அங்கீகரிக்கப்பட்ட அயல்நாட்டு வணிகர்கள் கவனிப்பாராக.

2. பன்னாட்டுக் கடன் அட்டைக் குறித்த கட்டணங்கள் அனைத்தும் அயல்நாட்டுக் குடியிருப்பு (வெளிநாட்டு)(NRE)A/c மற்றும் அயல்நாட்டு நாணய அயல்நாட்டு குடியிருப்பாளர் (FCNR) கணக்குகளுக்கு வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தின் மூலம் அல்லது அதில் உள்ள இருப்புத்தொகையின் மூலமே கட்டப்பட வேண்டும் என்ற விதிக்கு உட்பட்டு அதிகாரம் பெற்ற அந்நியச் செலாவணி வணிகர்கள் அயல்நாட்டுக் குடியிருப்பு இந்தியர்/ மற்றும் இந்திய வம்சாளியினருக்கு ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியின்றியே பன்னாட்டுக் கடன் அட்டை வழங்கிடலாம்.

3. தத்தம் குழுவைச் சார்ந்த முகவர்கள் கவனத்திற்குக் இந்த சுற்றறிக்கையின் கருத்துக்களை எடுத்து செல்லும்படி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

கிரேஸ் கோஷி
தலைமைப் பொது மேலாளர்